உதவிஆணையர்/செயல்அலுவலர் அலுவலகம்
அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில்,
மேல்மலையனூர் (ம) வட்டம்

நாள் : 27.01.2026

அய்யா,

பொருள் : திருக்கோயில் பயன்பாட்டிற்கு தடுப்பு கட்டைகள் (Barry guard) மற்றும் கண்காணிப்பு கோபுரம் (Watch Tower) வழங்க கோருதல் – அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில்- மேல்மலையனூர் (ம) வட்டம் – விழுப்புரம் மாவட்டம் – தொடர்பாக.

---------------------------

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் (ம) வட்டம், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலில் பிரதி மாதா மாதம் அமாவாசை விழா வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது. மேற்படி அமாவாசை விழாவில் நடைபெறும் ஊஞ்சல் உற்சவத்தை காண பல இலட்சம் பக்தர்கள் வருகை தந்து அம்மனின் ஊஞ்சல் உற்சவத்தை கண்டு தரிசனம் செய்து செல்கின்றனர். மேலும் வருட உற்சவமான மாசிப்பெருவிழா எதிர்வரும் 15.02.2026 முதல் 27.02.2026 முடிய வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. மேற்படி விழாவிற்கு பக்தர்கள் வருகை அதிக அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. திருக்கோயிலுக்க வருகை தரும் பக்தர்களின் கூட்ட நெரிசலை கட்டுப்படுத்துவதற்கும், கண்காணிப்பதற்கும் தங்கள் நிறுவனத்தின் மூலம் தடுப்பு கட்டைகள் (Barry guard) மற்றும் கண்காணிப்பு கோபுரம் (Watch Tower) வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

27/01/2026

உதவிஆணையர்/செயல்அலுவலர்

உதவி ஆணையர்/செயல் அலுவலர்
அருள்மிகு ... திருக்கோயில்
மேல்மலையனூர் ... வட்டம்-604 204
விழுப்புரம் மாவட்டம்.

<u>பெறுநர்</u>

மேலாளர்,

பச்சையப்பாஸ் சில்க்ஸ்,

திருவண்ணாமலை,